## ஹோமியோபதி வைத்திய சபை – 2017

---

ஹோமியோபதி வைத்திய சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 40(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கைகளின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பராயம் முனைப்பழியுள்ளதாக்குகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹோமியோபதி வைத்திய சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு ஆரம்பமாவது அது பயன்படுத்துவதற்கு தயார் நிலையில் கொண்டு வரப்பட்டதன் பின்னராக இருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் சபையினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி கவனத்தில் கொள்ளப்படாமல் அந்த கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்தல் மற்றும் அகற்றப்படுகின்ற ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்படாமை என்ற கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 8**

நியமத்தின் 100 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கு எதிராக காணப்படுகின்ற 5 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருந்துகளை உறையிடுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மருந்துக் கொள்கலன் டப்பி மற்றும் உறைகளுக்காக செலவிடப்பட்ட கிரயம் என்பன கொள்வனவு செய்யப்படுகின்ற ஆண்டின் போதே செலவினமொன்றாக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதனால் முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட ரூபா 233,000 கிரயமான மருந்து கொள்கலன் மற்றும் டப்பி என்பன ஆண்டின் செலவினமாக பதியப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 685,300 கிரயமாக எஞ்சிய இருப்புக்கள் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமான நடைமுறைச் சொத்துக்களும் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 19 ஊழியர்களிடமிருந்து முழுமையான சேவைக் காலத்திற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்க வேண்டிய பணிக்கொடை நிதிஏற்பாடு ரூபா 840,650 ஆக இருந்த போதிலும், அதற்குப் பதிலாக ரூபா 497,614 தொகையான நிதிஏற்பாடு செய்யப்படாமையின் காரணமாக பணிக்கொடை ஏற்பாடு ரூபா 343,036 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பரீட்சைக் கட்டணமாக 2014 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்த ரூபா 195,900 தொகை சபையின் பெயரிலுள்ள நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளரின் பெயரில் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த வருமானம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் தொடர்ந்தும் அது சபையின் சொத்தொன்றாக இல்லாதிருந்த போதும் அதன் பெறுமதி சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஹோமியோபதி வைத்திய சபை அலுவலகம் சுகாதார அமைச்சிற்குரிய கட்டிடமொன்றில் நடாத்திக் கொண்டிருந்ததுடன், அக்கட்டிடம் மற்றும் நிலத்தின் உரித்து சபைக்குச் சொந்தமற்றதாகக் காணப்பட்ட போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் அந்தக் கட்டிடத்திற்கு பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 4,227,506 தொகை நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 259,990 கிரயமான 7 பெயர்ப் பதாகைகளின் பெறுமானத் தேய்வு ரூபா 31,199 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிவிளைவுகள் ரூபா 430,427 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 422,515 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 7,912 குறைவொன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் மீண்டெழும் நிதிஏற்பாடு ரூபா 1,189,976 இனாலும் மொத்தச் செலவினம் ரூபா 1,209,301 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட குறைவிற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 111,977 மற்றும் ரூபா 170,636 தொகையான பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 271,598 மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 422,515 மற்றும் ரூபா 430,427 பற்றாக்குறை ஏற்பட்டிருந்தன. எனினும், நிதிவிளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,873,487 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 9,951,274 வரை அதாவது 6 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான பற்றாக்குறையுடன் அதிகரித்திருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 10,015,998 மற்றும் ரூபா 11,662,324 வரை அதிகரித்திருந்தது.

## 3.2 நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள்

வைத்திய சபையில் சேவையாற்றிய வைத்தியர் ஒருவரையும் தொழிலாளர் ஒருவரையும் சேவையிலிருந்து அகற்றியமைக்கு எதிராக முறையே ரூபா 3 மில்லியன் மற்றும் ரூபா 2 மில்லியன் வீதம் நட்டஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நிலுவைச் சம்பளம் செலுத்துதல் மற்றும் வைத்திய சபை கலைக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற நியமனங்கள் மற்றும் பதிவுகளை நீக்குமாறு கோரி இரண்டு வைத்தியர்களினால் சபைக்கு எதிராக 02 வழங்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடல்

ஹோதியோபதி வைத்திய தொழிலில் ஈடுபடுவதை மேம்படுத்துதல், தைரியமூட்டுதல் மற்றும் முறைமைப்படுத்தல், ஹோமியோபதி வைத்திய முறைமை தொடர்பான ஆராய்ச்சிகளும் மேம்படுத்தலும், மருந்து வகைகள் மற்றும் ஏனைய தயாரித்தல் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தலை முறைமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய திட்டத்தில் உள்ளடக்கி மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது சபையின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம், ஹோமியோபதி வைத்தியசாலைகளைப் பதிவு செய்வதற்கு 2016 நவம்பர் 04 ஆந் திகதி நடைபெற்ற இடைக்கால வைத்திய சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நடாத்தப்படுகின்ற 07 சிகிச்சை நிலையங்களில் 04 சிகிச்சை நிலையங்களுக்காக நோயாளிகள் வருகை தருதல் குறைவடைந்திருந்ததுடன் அக்குறைவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 4 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையிலான வீழ்ச்சி காணப்பட்டது. 03 சிகிச்சை நிலையங்களில் நோயாளிகளின் வருகை அதிகரித்திருந்ததுடன் அவ்வதிகரிப்பை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 06 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தன.

(i) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஹோமியோபதி சுகாதார சேவை வங்குகின்ற நிறுவனங்களை பதிவு செய்வதற்கும் அரசாங்கத்தின் ஹோதியோபதி வைத்தியக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்கும் தேவையான பிரமாணங்களை வெளியிடல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களை வெளியிட்டு பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு

திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கட்டளை மற்றும் 3 விதிகளை வரைபு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது பரீட்செயொன்றை நடாத்தி வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு பரீட்சையை நடாத்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், பரீட்சை நடாத்தப்பட்டிராததுடன் வைத்தியர்களைப் பதிவு செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்து பகிந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மருந்துகளை இறக்குமதி செய்யும் 07 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற இடைக்கால வைத்திய சபையினால் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பாடநெறியொன்றுக்கான கட்டணமாக அறவிடப்பட்ட பணம் தனியார் வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கின் மீதி ரூபா 1,702,684 ஆக இருந்தது. திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய பாடநெறி நடாத்தப்படாதிருந்ததுடன் அப்பணத்தை வைப்பாளர்களுக்கே மீளச் செலுத்த வேண்டியதாக இடைக்கால வைத்திய சபை தீர்மானித்திருந்த போதிலும், வைப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அறவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படவில்லை.

(ஆ) 2016 இன் 10 ஆம் இலக்க ஹொமியோபதி அதிகாரச்சட்டத்தின் 51(2) பிரிவின் பிரகாரம் அமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால வைத்திய சபை இந்த அதிகாரச்சட்டம் அமுல்படுத்தப்படும் திகதி முதல் இரண்டு வருடங்களில் சபை தாபிக்கப்படும் வரை சபையின் பணிகளை நிறைவேற்றவேண்டியிருந்தது. எனினும், அதிகாரச்சட்டத்தின் 51(3) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் இடைக்கால வைத்திய சபை நியமிக்கப்பட வேண்டியது குறித்த தினம் ஆரம்பிக்கின்ற மூன்று மாத காலத்திற்காகும். அதன் பிரகாரம் இடைக்கால வைத்திய சபையின் செல்லுபடிக்காலம் தொடர்பாக அதிகாரச்சட்டத்தில் ஒவ்வொரு பிரிவுகளினதும் இணங்காமைகளைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

ஹோமியோபதி வைத்தியர்களை பதிவு செய்யும் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த 08 வைத்தியர்களின் பெயர் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பொதுமக்களின் நிதியினைச் சேகரிப்பதற்கான அதிகாரத்தைப் பெற்ற எந்தவொரு ஏற்பாடு இன்றியும், முறையான அங்கீகாரமின்றியும் ''ஹோமியோபதி நிதியம்'' என்ற பெயரில் ரூபா 50 பெறுமதியுடைய 100 நிதி உதவிப் பத்திரங்கள் அடங்கிய நிதிஉதவிப் பத்திர புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன், அச்சிடப்பட்ட மொத்த நிதிஉதவிப் பத்திரங்களின் எண்ணிக்கை, அச்சிடப்பட்ட வருடம், நிதி உதவிப் பத்திர விற்பனை வருமானம் மற்றும் பணத்தை வங்கியிடல் தொடர்பான தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படவில்லை. 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி வரையிலும் அதில் 417 புத்தகங்களின் இருப்பொன்று எஞ்சியிருந்தது. காணப்பட்ட ஆகக்குறைந்த புத்தகத்தின் இலக்கத்திற்கும் ஆகக்கூடிய புத்தகத்தின்

இலக்கத்திற்கும் இடையே 162 புத்தகங்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதன் மூலம் சேகரிக்கக் கூடியதாக இருந்த மொத்தப் பணம் ரூபா 810,000 ஆகும்.

### 4.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ஹோமியோபதி வைத்தியக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் கற்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான கட்டமைப்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் கற்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,199,254 கிரயமான நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கட்டிடம் என்பன 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 20(2) மற்றும் 20(3) ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரி செயலாளரினதும் சபையினதும் விருப்பத்தின் பிரகாரம் அமைச்சின் உதவிச் செயலாளரொருவர் தற்காலிகமாக சபையின் பதிவாளராக நியமிக்கப்பட வேண்டுமாக இருந்த போதிலும், இடைக்கால நிர்வாக சபையினால் அமைச்சிற்கு வெளியேயுள்ள ஒருவர் 03 வருட தகுதிகாண் காலத்தின் கீழ் 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதி பதிவாளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஆ) மருந்து கலவையாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்த்தல் நடைமுறையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம், சேவையில் நிரந்தரமாக்குவதற்காக பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கழிவற்கு முன் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டியிருந்த போதிலும், 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்ட 07 மருந்து கலவையாளர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்காக உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையை நடாத்துவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் வருட நிகழ்ச்சி நிரல் தொடர்பாக வைத்திய சலையினால் தெளிவுபடுத்தப்படாமையின் காரணமாக அதன் பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய இடங்களினது இலக்குகளின் அடிப்படையில் அடைவுகளை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் சபைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்காததுடன் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக சபையின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட பாதீடொன்றைத் தயாரித்து அதனை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. கீழே காண்பிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக முகாமைத்துவம் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | சகல சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களை உள்ளடக்கிய பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படாமை மற்றும் சீராக்கங்களுக்கான நாட்குறிப்புப் பதிவுகள் பதியப்படாமை |
| (ஆ) நுகர்வுப் பொருள் இருப்புக் கட்டுப்பாடு | மருந்து கொள்கலன் டப்பி மற்றும் உறைகளின் இருப்பு பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமை மற்றும் அந்த இருப்புக்கள் தொடர்பாக சரியான கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்படாமை |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் ஹோமியோபதி வைத்திய விடயங்களுக்குள்ளான பதவியணியினர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை |